**செ. கு. எண்:50** **நாள்:17.02.2013**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 17.2.2013

காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், பெருங்குடி சுங்கச்சாவடி அருகே, 14.2.2013 அன்று பழைய மகாபலிபுரம் சாலையில் சென்று கொண்டிருந்த இரு சக்கர வாகனம் மீது மாநகர அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியைச் சேர்ந்த திரு. சரவணன் என்பவரின் மகன் பாண்டியராஜன் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த பாண்டியராஜன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த பாண்டியராஜன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**